நிதிநிலை அறிக்கை: ஓய்வூதியர் சங்கம் அதிருப்தி

நீடாமங்கலம், மார்ச் 15: தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை குறித்து தமிழ்நாடு அரசு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் மாநில செயலாளர் குரு. சந்திரசேகரன், மாநில செயற்குழு உறுப்பினர் எஸ். புஷ்பநாதன் ஆகியோர் சனிக்கிழமை கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை ஏமாற்றமளிக்கிறது. முதலமைச்சரின் வாக்குறுதி அரசு ஊழியர் , ஆசிரியர் சத்துணவு – அங்கன்வாடி ஊழியர்கள், ஓய்வூதியர்களுக்கு கடந்த நான்காண்டு கால ஆட்சியிலும் நிதிநிலை அறிக்கைகளிலும் ஏமாற்றமே மிஞ்சியது.

அதனால் 2025-2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து மிகுந்த எதிர்பார்ப்பில் இருந்த ஓய்வூதியர்களுக்கு, வாக்குறுதிகளை நிறைவேற்றாத அறிக்கையாக இந்த நிதி நிலை அறிக்கையும் அமைந்துவிட்டது என தெரிவித்துள்ளனர்.

பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி பட்டமளிப்பு விழா

விழாவில் பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவிக்கு பட்டம் வழங்கிய அவரது பெற்றோர். உடன் பெங்களூர் ஜெயின் நிகர்நிலை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என். சுந்தரராஜன், கல்லூரி நிர்வாகத்தினர்.

மன்னார்குடி, மார்ச் 15: மன்னார்குடி பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி 4 –ஆவது பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி தலைவரும் அடைக்கல அன்னை சபைத் தலைமை அன்னையுமான மரிய பிலோமி தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக பெங்களூர் ஜெயின் நிகர் நிலை பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் சார்பு அதிபருமான என். சுந்தரராஜன் கலந்துகொண்டு பேசியது:

பட்டம் பெறும் நீங்கள் உங்களுக்கு கல்வியையும் திறமையையும் கொண்டு நாட்டுக்கும் சமூகத்துக்கும் உதவ வேண்டிய பொறுப்பு உள்ளது. வெற்றிபெறுவது மட்டுமல்ல, நல்ல மனிதராகவும் இருந்தால் மட்டுமே வாழ்க்கையில் உண்மையான கனவுகளையும் சாதனையாக மாற்ற முடியும். மாணவிகளிடம் வித்தியாசமான, முற்போக்கான சிந்தனைகள் உதிக்க வேண்டும். மன உறுதி இருந்தால் வாழ்க்கையில் சாதிக்கலாம் என்றார்.

கல்லூரி முதல்வர் விக்டோரியா ஆண்டறிக்கை வாசித்தார். இளநிலை மாணவிகள்350 பேர், முதுநிலை மாணவிகள்37 பேர் என 387 பேருக்கு பட்டம் வழங்கப்பட்டது. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்ற 72 மாணவிகளுக்கு சான்றிதழ், பதக்கம், ரொக்கத் தொகை வழங்கப்பட்டது. அவர்களில் 3 பேர் முதலிடம், 4 பேர் இரண்டாமிடம், 6 பேர் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். பெற்றோர்களே தங்களின் மகள்களுக்கு பட்டம் வழங்கினர்.

முன்னதாக கல்லூரி செயலர் அம்புரோஸ் மேரி வரவேற்றார். முன்னாள் மாணவ மன்றத் தலைவர் என். ரஸ்பியா சுல்தானா நன்றி கூறினார்.

மத்திய பல்கலை.யில் மகளிர் தின கொண்டாட்டம்

நன்னிலம், மார்ச்15: திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தில் சர்வதேச மகளிர் தினம் மற்றும் மகளிர் சிறப்பு மருத்துவ முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

துணைவேந்தர் பேராசிரியர் மு. கிருஷ்ணன் தலைமை வகித்தார். திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிபதி பி. செல்வமுத்துக்குமாரி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். தொடர்ந்து, பல்வேறு சாதனைகள் நிகழ்த்திய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பரிசு வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

விழாவில் பங்கேற்ற பல்கலைக்கழக துணைவேந்தர் மு. கிருஷ்ணன், திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிபதி பி. செல்வமுத்துக்குமாரி உள்ளிட்டோர்.

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை சிறப்பு முகாமில் கலந்துகொண்ட ஜிஸ்னா, அனைத்திந்திய தல் சைனிக் கேம்பில் கலந்து கொண்டு பட்டம் பெற்ற அக்ஷயா, இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில் மூலமாக ரூ 1.5 கோடி நிதி பெற்ற பேராசிரியர்கள் விஜயலெட்சுமி, விசாலாட்சி , சாதனைகள் புரிந்த சங்கீதத் துறை பேராசிரியர் பிரேமலதா, நாட்டியக் கலைப் பேராசிரியர் வடிவழகி உள்ளிட்டோர் பாராட்டப்பட்டனர்.

தொடர்ந்து, மகளிருக்காண சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. மருத்துவர்கள் புவனேஸ்வரி, நஸ்ரின் பாத்திமா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற முகாமில், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் தவிர சுற்றுப்புற கிராமப் பெண்களும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இந்நிகழ்ச்சிகளை பேராசிரியர்கள் ரவிக்குமார், சுந்தரவடிவு உள்ளிட்டோர் ஒருங்கிணைத்தனர்.

திருவாரூரில் புதிய கட்சி தொடக்கம்

திருவாரூர், மார்ச் 15: திருவாரூரில், இந்திய அரசியலமைப்பு மக்கள் கட்சி என்ற புதிய கட்சி சனிக்கிழமை தொடங்கப்பட்டது.

பகுஜன் சமாஜ் கட்சியின் நிறுவனர் கான்சிராம் பிறந்தநாள் விழா, திருவாரூரில் சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில், இந்திய அரசியலமைப்பு மக்கள் கட்சி என்ற கட்சி தொடங்கப்பட்டது.

இதில், இக்கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் தம்மசாக்கியா, மாநில ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த ஜெயராமன், சேகர், கலையரசன், நாகநாதன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தீர்மானங்கள்: அனைத்து மாணவர்களுக்கும் கட்டாய இலவசக் கல்வி, அரசு செலவில் பயில வழிவகை செய்யப்படும். குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்படும். பஞ்சமர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களை மீட்டு மீண்டும் வழங்க முழு உத்தரவாதம் அளிக்கப்படும். தனியார் பள்ளிகள் அனைத்தும் அரசுடைமையாக்கி, கல்வியில் புதிய சரித்திரம் படைக்க வழிவகை செய்யப்படும். பெண்களுக்கு பேறுகால நிதியாக ரூ.25 ஆயிரம் வழங்கப்படும். தமிழகத்தில் மக்கள்தொகை, சாதி வாரிக் கணக்கெடுப்பு எடுத்து விகிதாச்சார அடிப்படையில், அவர்களின் நலன்களை காக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழகத்தில் உள்ள மது ஆலைகள் மூடப்படும். விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு 60 வயதுக்கு மேல் ஓய்வூதியத் திட்டம் அறிவிக்கப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மழலையர் பட்டமளிப்பு விழா

நன்னிலம், மார்ச் 15: வண்டாம்பாளை விவேகானந்தம் வித்யாஷ்ரம் சிபிஎஸ்இ பள்ளியில் கிண்டர்கார்டன் முடித்த குழந்தைகளுக்கு பட்டமளிப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

குழந்தைகளுக்கு பட்டம் வழங்கும் தமிழ்நாடு கல்வியியல் நிறுவனத்தின் முன்னாள் இணை இயக்குநர் முனைவர் ஆர்.டி. பன்னீர்செல்வம், பாரதிதாசன் பல்கலைக்கழக கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர் முனைவர் ஏ. உத்திராபதி ஆகியோர்.

தமிழ்நாடு கல்வியியல் நிறுவனத்தின் முன்னாள் இணை இயக்குநர் ஆர்.டி. பன்னீர்செல்வம், பாரதிதாசன் பல்கலைக்கழகக் கூட்டமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஏ. உத்திராபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு, குழந்தைகளுக்கு அவர்களது புகைப்படத்துடன் கூடிய பட்டத்தை வழங்கி வாழ்த்தினர்.

நிகழ்ச்சியில் பள்ளி தாளாளர் டி. ஜனகமாலா, திருவாரூர் திருவிக அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் ச. அழகன், பள்ளி முதல்வர் சி. எஸ். மஹாலெஷ்மி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆட்சியில் பங்கு தரும் கட்சியுடன் கூட்டணி

புதிய தமிழகம் கட்சித் தலைவர் கே. கிருஷ்ணசாமி

திருவாரூர், மார்ச் 15: ஆட்சியில் பங்கு தரும் கட்சியுடன் கூட்டணி என புதிய தமிழகம் கட்சி நிறுவனத் தலைவர் கே. கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் புதிய தமிழகம் கட்சி சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற இடஒதுக்கீடு மீட்பு கருத்தரங்கம் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற அவர் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழக அரசின் வேளாண் மற்றும் நிதிநிலை அறிக்கையில் மக்களுக்கான நலத்திட்டங்கள் ஏதும் இல்லை. இந்த நிதிநிலை அறிக்கை காகிதப்பூவாக உள்ளது.

அருந்ததியர் இட ஒதுக்கீடு, ஜாதி வாரிக் கணக்கெடுப்பு போன்ற விஷயங்களில் பிரதான எதிர்க்கட்சிகள் கவனம் செலுத்தவில்லை. அருந்ததியர் இடஒதுக்கீட்டுக்கு ஆதரவாக எந்த கட்சி போராட்டம் நடத்தினாலும், அவர்களுக்கு புதிய தமிழகம் ஆதரவு தெரிவிக்கும்.

திருவாரூரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகிறார் புதிய தமிழகம் கட்சி நிறுவனத் தலைவர் கே. கிருஷ்ணசாமி.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு அளிக்கும் கட்சியுடன் கூட்டணி வைப்போம். நான்கைந்து சீட்டுக்கு கூட்டணி வைத்தால் சட்டப்பேரவையில், அவர்கள் சொல்வதை தான் கேட்க வேண்டியிருக்கும். எனவே, ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கு என்ற ஒற்றைப் புள்ளியில் அனைவரும் வரவேண்டும். திருமாவளவன் கூட்டணியை விட்டு வெளியில் வந்து, இதுதொடர்பான அணியை உருவாக்க வேண்டும்.

தமிழகத்தில் திமுக, அதிமுக என்று மாறி மாறி ஆட்சிக்கு வரும் முறை ஒழிய வேண்டும். இல்லாவிட்டால் ஊழல்கள் தொடர்ந்தபடி இருக்கும். எந்த பிரச்னைக்கும் தீர்வு காண முடியாது என்றார்.

மாவட்டச் செயலாளர் தியாகராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

இருசக்கர வாகனம் திருடியவர் கைது

மன்னார்குடி, மார்ச் 15: மன்னார்குடி அருகே இருசக்கர வாகனம் திருடியவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

மன்னார்குடி மீனாட்சி அம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் சதீஷ் (25). இவர், ரொக்கக் குத்தகை பகுதியில் உள்ள கிடங்கில் பணியாற்றுகிறார். அண்மையில் கிடங்கு வாசலில் இவர் நிறுத்தியிருந்த இருசக்கர வாகனத்தை காணவில்லை.

இதுகுறித்து மன்னார்குடி தாலுகா காவல்நிலையத்தில் சதீஷ் புகார் அளித்தார். அதன்பேரில், போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டர். சந்தேகத்தின் பேரில் பாமணி வடக்குத்தெரு ஆதிநிதி (19) என்பவரிடம் விசாரித்ததில் சதீஷின் இருசக்கர வாகனத்தை திருடியதை ஒப்புக் கொண்டார். இதையடுத்து, ஆதிநிதியை கைது செய்து, சிறையில் அடைத்தனர்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கருத்தரங்கம்

நீடாமங்கலம், மார்ச்15: நீடாமங்கலம் பல்நோக்கு சேவை இயக்கம் சார்பில் காற்று மாசுபாட்டை குறைத்தல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

துணைத் தலைவர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். துணைச் செயலாளர் செந்தில்குமார், துணைத் தலைவர் செல்வராஜ் முன்னிலையில் நடைபெற்றது.

நீடாமங்கலம் பல்நோக்கு சேவை இயக்கத்தின் சார்பில் கல்லூரி மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கருத்தரங்கம் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விதமாக காற்று மாசுபாட்டை குறைத்தல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை எழுதுதல், காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்தும் காரணிகளை கண்டறிதல், அதற்கான தீர்வுகளும் குறித்து இக்கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் 13 பேர், டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண் கல்லூரி ஈச்சங்கோட்டை மாணவிகள் 11 பேரும் பங்கேற்றனர் . காற்று மாசுபாட்டை குறைக்கும் நடவடிக்கைகள் பற்றியும், காற்று மாசுபாட்டால் ஏற்படும் விளைவுகளையும், அதனால் ஏற்படும் தாக்கங்களுக்கு தீர்வு பற்றியும் பல்நோக்கு சேவை இயக்க செயலாளர் ஆசிரியர் ஜெகதீஷ் பாபு விளக்க மளித்தார்.

சுற்றுச்சூழலுக்கு காற்று மாசுபாட்டால் ஏற்படும் தாக்கங்களை பற்றி மாணவர்கள் ஆய்வு அறிக்கைகளாக எழுதி தாக்கல் செய்ய வேண்டும், மாணவர்களது ஆய்வறிக்கைகள் கல்லூரி பேராசிரியர்கள் மேற்பார்வையில் விவாதிக்கப்பட்டு சிறப்பாக ஆய்வறிக்கை எழுதிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. முன்னதாக இயக்க தலைவர் பத்மஸ்ரீ ராமன் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

கடலுக்கு சென்ற மீனவர் உயிரிழப்பு

திருத்துறைப்பூண்டி, மார்ச் 15:

முத்துப்பேட்டை பகுதி கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர், கடலோரத்தில் சடலமாக கிடந்தார்.

முத்துப்பேட்டை அருகே உள்ள செங்கங்காடு கிராமத்தைச் சேர்ந்தவர் வடிவேல் மகன் கோபால் (55). (படம்). மீனவரான இவர், வழக்கம் போல சனிக்கிழமை அதிகாலை மீன்பிடிக்க கடலுக்குச் சென்றார்.

இந்நிலையில், கடற்கரையோரம் கோபால் மயங்கி கிடந்ததாகக் கூறப்படுகிறது. அவரை சக மீனவர்கள் மீட்டு, முத்துப்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள், கோபால் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து, முத்துப்பேட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்து, சடலத்தை உடற்கூறாய்வுக்காக திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

DBS

ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் வங்கியின் தனிநபர் கடன் வாடிக்கையாளர்கள், தங்களது கடன் தொகையைத் திருப்பி செலுத்த தவறி விட்டனர் மற்றும் அவர்களது கடனானது வாராக்கடனாக வகைபடுத்தப்பட்டுள்ளது. நிலுவை தொகை மற்றும் NPA தேதி விவரங்களுடன் கூடிய பதிவு தபால், வங்கியில் பதிவு செய்யப்பட்ட அவர்களின் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

24.03.2025 அன்று அல்லது அதற்கு முன் முழு கடன் தொகை / காலதாமதமான தொகை செலுத்தப்படாவிட்டால், வாடிக்கையாளர்களின் தனிநபர் கடன் தொடர்புடைய தங்க நகைக்கடன் பிணையங்கள் **24.03.2025 அன்று காலை 11.00 மணி** அல்லது அதற்குப் பிறகு வேறு எந்த வசதியான தேதியிலும், மறு அறிவிப்பு இல்லாமல் மற்றும் வங்கியின் முழுமையான விருப்பத்தின் பேரில் வங்கியால் பொது ஏலத்தில், வங்கி வளாகத்தில் அல்லது **https://egold.auctiontiger.net** என்ற மின்–ஏல தளம் மூலம் விற்கப்படும்.

குறிப்புச்	வாடிக்கையாளர் பெயர்	கிளை பெயர்	மொத்த எடை	நிகர எடை
UL - 39836568	வள்ளி. K	கடலாங்குடி	36.50	36.50
UL - 45138726	தீபா. K MRS	மூலங்குடி	16.00	16.00

இடம் : சென்னை
நாள் : 14.03.2025

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
DBS வங்கி இந்தியா லிமிடெட்

*DBS வங்கி இந்தியா லிமிடெட், சிங்கப்பூரின் DBS வங்கி லிமிடெட் நிறுவனத்தின் முழு உரிமத்தின் கீழ் இயங்கும் துணை நிறுவனமாகும்

DBS

ஏல அறிவிப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ள எங்கள் வங்கியின் தங்க OD கணக்கு வாடிக்கையாளர்கள், தங்களது கணக்கில் வட்டித் தொகையை திருப்பி செலுத்த தவறி விட்டனர் மற்றும் அவர்களது வங்கி கணக்கானது வராக்கடனாக வகைபடுத்தப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பப்பட்ட பல நினைவூட்டல் அறிவிப்புகள், வங்கியில் பதிவு செய்யப்பட்ட அவர்களின் முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

24.03.2025 அன்று அல்லது அதற்கு முன் முழு கடன் தொகை / காலதாமதமான வட்டித் தொகை செலுத்தப்படாவிட்டால், வாடிக்கையாளர்களின் பிணையங்கள் **24.03.2025 அன்று காலை 11.00 மணி** அல்லது அதற்குப் பிறகு வேறு எந்த வசதியான தேதியிலும், மறு அறிவிப்பு இல்லாமல் மற்றும் வங்கியின் முழுமையான விருப்பத்தின் பேரில் வங்கியால் பொது ஏலத்தில், வங்கி வளாகத்தில் அல்லது **https://egold.auctiontiger.net** என்ற மின்–ஏல தளம் மூலம் விற்கப்படும்.

குறிப்புச்	வாடிக்கையாளர் பெயர்	கிளை பெயர்	மொத்த எடை	நிகர எடை
OD - 45625876	ரஞ்சித் துரைராஜன்	மயிலாடுதுறை	28.40	28.40
OD - 45625672	வசந்த் ரவிசந்திரன்	மயிலாடுதுறை	9.00	9.00
OD - 49528809	அருள் லாரன்ஸ்	நிடூர்	105.70	104.10
OD - 49528818	அருள் லாரன்ஸ்	நிடூர்	108.10	83.10
OD - 49528863	அருள் லாரன்ஸ்	நிடூர்	132.20	126.80
OD - 49528845	நேதாஜி விஸ்வநாதன்	நிடூர்	15.90	15.90
OD - 49528146	ஷிஃபோனா பெனாசிர் ராஜா முகமது	நிடூர்	37.00	37.00
OD - 75527445	அபினாஷ் ராஜ்	திருமங்கலம்	8.00	8.00
OD - 75528268	சுகன்யா	திருமங்கலம்	28.30	28.30
OD - 75528231	வனஜா கண்ணதாசன்	திருமங்கலம்	23.70	23.70
OD - 44721916	ஞானாம்பாள் சிவானந்தம்	மன்னார்குடி	38.70	38.50
OD - 44722119	உம்மாசலிமா ஜாஹிர் ஹுஸைன்	மன்னார்குடி	68.10	67.60
OD - 44721961	வெள்ளதுரை.M	மன்னார்குடி	21.90	21.80
OD - 44721369	விஸ்வநாத் வீரக்குமார்	மன்னார்குடி	36.20	35.80
OD - 45122525	சாந்தகுமார் சோமு	மூலங்குடி	31.65	31.65
OD - 45224772	அண்ணாதுரை சுப்ரமணியன்	முத்துப்பேட்டை	45.50	45.30
OD - 54021715	ஹரிஹரன் நடராஜன்	பொதக்குடி	41.10	40.20
OD - 54022006	கண்ணதாசன் செல்லமுத்து	பொதக்குடி	8.10	8.00
OD - 54022088	ரஜினி பெருமாள்	பொதக்குடி	15.90	15.90
OD - 54022194	சத்தியசீலன் ராமதாஸ்	பொதக்குடி	23.00	22.80

இடம் : சென்னை
நாள் : 13.03.2025

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
DBS வங்கி இந்தியா லிமிடெட்

*DBS வங்கி இந்தியா லிமிடெட், சிங்கப்பூரின் DBS வங்கி லிமிடெட் நிறுவனத்தின் முழு உரிமத்தின் கீழ் இயங்கும் துணை நிறுவனமாகும்

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

(FORMERLY KNOWN AS EQUITAS FINACNE LTD)

பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050.

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

SARFAESI சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 விதிகள் 8(6)ன் (சேர்த்து வாசிக்கவும்) கீழ் அசையா சொத்திற்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடன்தாரர்கள், இணை கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோருக்கு குறிப்பாகவும் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் அறிவிப்பது என்னவென்றால் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், அதிகாரபூர்வ அதிகாரியாவோர் கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமான வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை பெற்றிலை கவாதினம் செய்துள்ளார். மேலும் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு வர்க்க சேர வேண்டிய கடன்பாக்கித் தொகைகளை பின்வரும் கடன்தாரர்களிடமிருந்து வசூலிப்பதற்காக இந்த சொத்துக்களை "எங்கு உள்ளதோ உள்ளபடியே" "என்ன உள்ளதோ அதே நிலையில்" மின்னணு ஏலம் மூலம் 17-04-2025 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது.

வ.எண்.1 : கடன்தாரர்/கள் & ஜாமீன்தாரர்/கள் பெயர் & முகவரி, செலுத்தவேண்டிய மொத்தத் தொகை + வட்டி

1.திரு.பூபாலன், த/பெ.உதயகுமார், 2/324, பழையபட்டி தெரு, பனையகுடி, புளவனூர், கடக்கம், மயிலாடுதுறை - 609205. 2. திருமதி.செல்வி, க/பெ.பூபாலன், 2/324, பழையபட்டி தெரு, பனையகுடி, புளவனூர், கடக்கம், மயிலாடுதுறை - 609205..

கடன் கணக்கு எண்.SEMYLDR0221275, 21.09.2023அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ..1,52,291/- மேலும் 22.09.2023அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (10-03-2025அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.3,31,909.26/-)

பிணைச் சொத்துக்களின் விவரங்கள் (அசையாச் சொத்து) உமயிலாடுதுறை பதிவு மாவட்டம் மற்றும் மயிலாடுதுறை இணை-1 சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், பனையகுடி கிராமத்தில் அமைந்துள்ள நத்தம் R.சர்வே எண்.127 இல் அமைந்துள்ள 1500 சதுர அடி விஸ்தீரணமுள்ள நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: திரு.கண்ணன் அவர்களின் உரிமை பெற்ற மனை; தெற்கில்: திரு.கதிரேசன் அவர்களின் உரிமை பெற்ற மனை; கிழக்கில்: சாலை; மேற்கில்: மோகன் அவர்களின் உரிமை பெற்ற மனை. அதனுடன் அதில் அமைந்துள்ள தற்போது அல்லது எதிர்காலத்தில் ஏதேனும் பூமியில் இணைக்கப்பட்டுள்ள அல்லது நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ளவைகள் மற்றும் அனைத்து எளிதான / வழக்கமான உரிமைகள் மற்றும் அனைத்து கட்டிடங்கள் மற்றும் வடிவமைப்புகள்.

மேலும் விபரங்களுக்கு: திரு.மணிமாறன்:8148643545; திரு.சந்தோஷ் சண்முகவேல்: 7448865337

நிர்ணய விலை ₹ 1,50,000/- | டேவணித் தொகை ₹ 15,000/-

வ.எண்.2 : கடன்தாரர்/கள் & ஜாமீன்தாரர்/கள் பெயர் & முகவரி, செலுத்தவேண்டிய மொத்தத் தொகை + வட்டி

1.திருமதி.கீர்த்திகா, க/பெ. அலெக்ஸ்பாண்டி, எண்.894/2, சடையன்காடு, வேட்டைக்காரனிருப்பு, கீழ்வேளூர் நாகப்பட்டினம்611112. 2.திரு.அலெக்ஸ்பாண்டி, த/பெ.அருள் ஃபிரான்சிஸ்ராஜ், எண்.894/2, சடையன்காடு, வேட்டைக்காரனிருப்பு, கீழ்வேளூர் நாகப்பட்டினம்611112..

கடன் கணக்கு எண்.SENGPTM0412010, 06.08.2024அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ..4,20,208/- மேலும் 07.08.2024அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (10-03-2025அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.5,22,217/-)

பிணைச் சொத்துக்களின் விவரங்கள் (அசையாச் சொத்து) நாகப்பட்டினம் பதிவு மாவட்டம் மற்றும் திருப்பூண்டி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கோவில்பட்டி கிராமத்தின் புதிய சர்வே எண்.33/8A, (பழைய சர்வே எண்.33/8), (புதிய நுணைப்பிரிவு சர்வே எண்.33.8A2) இல் அமைந்துள்ள 0.13.5 ஏர்ஸ் (1350 சதுர அடி) விஸ்தீரணமுள்ள நிலம் அதனுடன் புதிதாக கட்டப்பட்ட சிமெண்ட் ஷீட் வீட்டுக்கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: விஜயகுமார் அவர்களின் சொத்து; தெற்கில்: பிரிட்டோ அவர்களின் சொத்து; கிழக்கில்: கணேசன் அவர்களின் சொத்து; மேற்கில்: வாய்க்கால் அல்லது சாலை.அதனுடன் அதில் அமைந்துள்ள தற்போது அல்லது எதிர்காலத்தில் ஏதேனும் பூமியில் இணைக்கப்பட்டுள்ள அல்லது நிரந்தரமாக பொருத்தப்பட்டுள்ளவைகள் மற்றும் அனைத்து எளிதான / வழக்கமான உரிமைகள் மற்றும் அனைத்து கட்டிடங்கள் மற்றும் வடிவமைப்புகள்.

மேலும் விபரங்களுக்கு: திரு.மணிமாறன்:8148643545; திரு.முருகன் G : 8838375304

நிர்ணய விலை ₹ 8,14,000/- | டேவணித் தொகை ₹ 81,400/-

வ.எண்.3 : கடன்தாரர்/கள் & ஜாமீன்தாரர்/கள் பெயர் & முகவரி, செலுத்தவேண்டிய மொத்தத் தொகை + வட்டி

1.திரு.மாதவன், த/பெ.ராமலிங்கம், எண்.4/642,மதகடி பிரதான சாலை, தலைஞாயிறு, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் 609201. 2. திருமதி.திவ்யா, க/பெ.மாதவன், எண்.4/642,மதகடி பிரதான சாலை, தலைஞாயிறு, மயிலாடுதுறை, நாகப்பட்டினம் 609201.

கடன் கணக்கு எண்SEKRIKL0302549; 30.09.2021 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ..3,40,755/- மேலும் 01.10.2021அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (10-03-2025அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.8,89,294.31/-)

பிணைச் சொத்துக்களின் விவரங்கள் (அசையாச் சொத்து) மயிலாடுதுறை பதிவு மாவட்டம் மற்றும் சீர்காழி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறு கிராமத்தின் புதிய சர்வே எண்.279/1`0` பழைய சர்வே எண்.279/1`0` பகுதி இல் அமைந்துள்ள 5802ச.அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, நிலத்தின் எல்லைகள்: வடக்கில் : சாலை;தெற்கில் : குற்றம்பொறுத்தீஸ்வரர் சாமி நிலம்;கிழக்கில் : நத்தம் காலி நிலம்;மேற்கில் : குற்றம்பொறுத்தீஸ்வரர் சாமி மனை.

மேலும் விபரங்களுக்கு: திரு.மணிமாறன்:8148643545; திரு.சந்தோஷ் சண்முகவேல்: 7448865337

நிர்ணய விலை ₹ 16,25,000/- | டேவணித் தொகை ₹ 1,62,500/-

ஏலத் தேதி 17-04-2025

மின்னணு ஏல விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் & நிபந்தனைகளை www.equitasbank.com & https://www.bankeauctions.com -ல் காணலாம்

தேதி: 16-03-2025
இடம்: நாகப்பட்டினம்

அதிகாரப்பூர்வ அலுவலர்
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஞாயிறுதோறும் தினமணியுடன